**இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு**

**O.S.No.51/2017**

2020 ம் ஆண்டு மார்ச் மாதம் 13-**ம்**தேதி பிவாசா.1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி **திருமதி.கே.சுதா, பி.எஸ்சி.,எம்.எல்., இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிபதி** என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | **திரு.செல்வகுமார்** | ஜாதி |
| த/க. பெயர் | | மதம் |
| கிராமம் | | தொழில் |
| தாலுக்கா | | வயது |
| மாவட்டம் | | |

**முதல் விசாரணை ..**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி. எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும், அதை படித்து பார்த்து கையெழுத்திட்டேன். நான் வாங்கிய சொத்திற்கு 30.11.2016 அன்று என் பெயருக்கு மின் இணைப்பு மாற்றம் செய்யப்பட்டது. அந்த மின் இணைப்பு மாற்றம் செய்யப்பட்ட கடிதத்தின் அசல் பிவாசாஆ.1. 19.4.2017 தேதியிட்ட என் பெயருக்கு சொத்து வரி மாற்றம் செய்யப்பட்டு, அதற்காக வழங்கப்பட்ட சொத்து வரி ரசீதின் அசல் பிவாசாஆ.2. 11.9.2014 அன்று தாவா சொத்திற்கு 1.1.87 முதல் 10.9.14 வரையான காலத்திற்கான வில்லங்கசான்று பிவாசாஆ.3. 3.11.2016 அன்று தாவா சொத்திற்கு 1.1.87 முதல் 2.11.16 வரையான காலத்திற்கான வில்லங்கசான்று பிவாசாஆ.4. நான் வாங்கிய சொத்திற்கு நான் நல்லெண்ண கிரையதாரர் என்பதால் இந்த வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு கோருகிறேன். பிவாசாஆ.1

பக்கம்.2

மற்றும் 2 ஆவணங்கள் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது.

வாதி தரப்பு வழக்குரைஞர் வேண்டுகோளின்பேரில் குவி ஒத்திவைக்கப்பட்டது.